258

# சைவ – வைஷ்ணவ ஸமரச

## பக்திப் பாடல்கள்.

தொகுத்தவர் :

திருமதி நீலாம்பாள் சுப்ரமண்ய முதலியார்,

சேலம்.

C

உபயம் :

பாப்பாரப்பட்டி

திரு. A. கோபாலசாமி செட்டியார்,

டாக்டர் சுப்பராயன் ரோட்,

சேலம் - 1.

Q:4146
N57

ரி பிரஸ், சேலம் - 1 போன் : 321

41328

அடியில்கண்ட புத்தகங்கள் கீழ்கண்ட விலாசத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

1. ஹிந்துமத பிரசுரம்
2. ஸ்ரீ நாம ராமாயணம்
3. ஸரஸ்வதி மாதர் சங்கம்
4. ஸ்தோத்ர ரத்னகரம் (துதி பாடல்கள்)

கிடைக்குமிடம் :—

பாப்பாரப்பட்டி

**ஆ. கோபாலசாமி செட்டியார்,**

11, டாக்டர் சுப்பராயன் ரோடு,

சேலம் - 1.

ஓம்.

# முகவுரை.

தமிழரின் பண்டைக்கால நாகரீகத்தையும் அந்நாகரீகத்தின் பகுதியாகிய தெய்வக்கொள்கையையும் நூல் முகத்தால் அறிய முயல்வோர்க்கு துணைபுரிவது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியமாகும். அந்நூலில் நாம் காணக் கிடப்பது ''கடவுள் என்ற ஒரு தனிப் பரம்பொருளை தமிழ் மக்கள் பல பெயர்களும் உருவங்களும் தந்து வழிபட்டார்களென்பதாகும் அவர்களில் பெரும்பிரிவினர் சைவர் வைணவர்களாவர். நாளடைவில் கடவுளர் பலரென்றும் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு உண்டென்றும் தவருன கொள்கை பரவி, இவ்விரு சமயத்தவர்களுக்கிடையே பூசல்களும் உண்டாயின. இத்தவருன எண்ணத்தை வேருடன் களைந்தெறிந்து பழைய ஒற்றுமையை நிலைநாட்ட முயல்வது தமிழறிஞரின் கடமையாகும்.

சைவ சமய நூல்களாகிய தேவார திருவாசகத்தையும் வைணவ நூலாகிய நாலாயிர திவ்யப்ரபந்தத்தையும் நன்கு ஆராய்ந்தறிந்த **திருமதி நீலாம்பாள் அம்மையார் (சேலம் வக்கீல் ஆர். சுப்ரமண்ய முதலியாரின் மனைவியார்)** அடிப்படை கொள்கைகளிலே இரு சமயங்களுக்கிடையில் வேறுபாடில்லையென்பதைக் காட்டி இரு சமயத்தினரிடையே ஒற்றுமையை உண்டாக்கி சமரச மனப்பான்மையை வளரச்செய்யும் நோக்கத்துடன் இருசமய நூல்களினின்றும் சில பாக்களைத் தெரிந்தெடுத்து ஒத்திட்டு விளக்கியுள்ளார்கள். இத்தொண்டு மிகவும் போற்றத்தக்கது. இத்திரட்டு நூல் கருதிய பயனைத் தருமென்பதில் ஐயமில்லை.

தமிழர்களுக்கிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்க!
தமிழ்ச் சமயம் வாழ்க.

**க. அரங்கசாமி முதலியார்,**
**'' திருவடி ''**
அடிவாரம் பழனி.

# ஆழ்வார்களும்

## ஆழ்வார்கள்.

1. 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு'

அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே

— பெரியாழ்வார்.

2. 'அவன் நீண்முடி ஐந்திலும் நின்று நடம்
செய்த தோள் வலி வீரமே பாடிப்பற'

காளியல் பொய்கை
கலங்கப் பாய்ந்திட்டு — அவன்
நீண்முடி ஐந்திலும்
நின்று நடம் செய்து
மீள அவனுக்கருள்
செய்த வித்தகன்
தோள் வலி வீரமே பாடிப்பற!
தூமணி வண்ணனைப் பாடிப்பற!

— பெரியாழ்வார்.

# நாயன்மார்களும்

## நாயன்மார்கள்.

1. பத்தர்கள் பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க
நம்பத்தர்கள் வஞ்சகர்போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை
கோன் அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறபியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

— சேந்தனர்.

2. 'அழிந்தன முப்புரம் உந்தீபற'

தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற

— மாணிக்கவாசகர்.

3. ‘ஆயிரம் தோள் பரப்பி, முடியாயிர மின்ன’

ஆயிரம்தோள் பரப்பி முடியாயிர மின்னிலக
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனனாளும் மலை
ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடைய மாலிருஞ் சோலையதே

— பெரியாழ்வார்.

4. ‘என்றென்றும் சேவகமேயேத்திப்பறை
கோள்வான் இன்றுயாம்வந்தோம் இறங்கே
லோரேம்பாவாய்’

அன்றிவ் வுலகமளந்தாயடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடமுதைத்தாய் புகழ் போற்றி
கன்றுகுணிலாவெறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோரெம்பாவாய்

— ஆண்டாள்.

5. அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனவிருளகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனரிவரொடும் புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே!

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

3. "ஆயிரம் தோளுடையானும் ஆயிர
ஞாயிறு போலும் ஆயிர நீண்முடியானும்'

ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடியானும்
ஆயிரம் பொன்வரைபோலும் ஆயிரம்
[தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறுபோலும் ஆயிர நீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே!

— திருநாவுக்கரசர்.

4. 'போற்றியாம் உய்ய ஆட்கோண்டருளும் போன்
மலர்கள் போற்றியாம் மார்கழிநீராடேல்
ஓரேம்பாவாய்'

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணுத புண்டரிகம்
போற்றி யாம்உய்ய ஆட்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீராடேல் ஓர் எம்பாவாய்!

— மாணிக்கவாசகர்.

5. எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

போற்றி என் வாழ்முதலாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
எற்றிநின் திருமுகத்தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனையுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

— மாணிக்கவாசகர்.

6.

புலம்பின புட்களும் பூம்பொழில்களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடலரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனராதலிலம்மா!
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோவில்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே!

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

7. 'அரங்கத்தம்மான் திருக்கமலபாதம்
வந்தேன் கண்ணினுள்ளன ஒக்கின்றதே'

அமலனாதிபிரான்
அடியார்க்கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான் — திருக்
கமலபாதம் வந்தென்
கண்ணினுள்ளன ஒக்கின்றதே

— திருப்பாணாழ்வார்.

6.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளியுதயத்
தொருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற்செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

— மாணிக்கவாசகர்.

7. காளத்தியான் அவன் என் கண்ணுளானே

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே
பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம்
சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப்பால்
நிற்பான் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப்
போதினுள்ளான்
பொருப்பிடையான்
நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான்
கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவன்
என் கண்ணுளானே !

— திருநாவுக்கரசு.

8. 'நீயே உலகெல்லாம்'

நீயே உலகெல்லாம் நின்னருளே நிற்பவைவும்
நீயே தவத் தேவ தேவனும் — நீயே
எரி சுடரும் மால் வரையுமெண்டிசையும் அண்டத்
திரு சுடருமாயவிவை

— திருமழிசையாழ்வார்.

9. 'வாழ்த்துக வாய் மகுடம் தாழ்த்து வணங்கு
மின்கள் மால்தன்னை'

வாழ்த்துக வாய் காண்க கண் கேட்க செவி மகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால் — சூழ்த்த
துழாய் மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை
வாழ வண் கைகூப்பி மதித்து

— திருமழிசையாழ்வார்.

10. 'இன்புருகு சிந்தை யிடுதிரியா — நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன்'

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

— பூதத்தாழ்வார்.

8. 'எல்லா உலகுமாளுய் நீயே'

எல்லா வுலகமு மாளுய் நீயே
ஏகம்ப மேவியிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா விணகளறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

— திருநாவுக்கரசர்.

9. 'வாழ்த்த வாயும் நிணக்க மடநெஞ்சும்
தந்த தலேவன்'

வாழ்த்த வாயும் நிணக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலேவனே
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவிணயேன் நெடுங்காலமே

— திருநாவுக்கரசர்.

10. 'உயிரேனும் திரிமயக்கி ஞானத்
தீயால் எரிகோள........'

உடம்பெனு மனேயகத்து உள்ளமே தகளியாக
மடம்படு முணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளே தாதை கழலடி காணலாமே

— திருநாவுக்கரசர்.

11. பொன்ஞழி ஏந்திஞன் பொன்னடியே சூடு
வேற்கு என்ஞகில் என்னே எனக்கு

*நாடிலும் நின்னடியே*
*நாடுவன் — நாடொறும்*
*பாடிலும் நின் புகழே*
*பாடுவன் — ஆடிலும்*
*பொன்ஞழி யேந்திஞன்*
*பொன்னடியே சூடுவேற்கு*
*என்ஞகி லென்னே யெனக்கு*

*— பொய்கையாழ்வார்.*

12. என்னப்பன் என்நேஞ்சிலுளானே

*மன்ஞ! இம்மனிசப்பிறவியை நீக்கி*
*தன்ஞக்கித் தன்னின்னருள் செய்யும் தலைவன்*
*மின்ஞர் முகில் சேர் திருவேங்கடம் மேய*
*என்ஞனை* **என்னப்பன் என் நெஞ்சிலுளானே**

*— திருமங்கையாழ்வார்,*

13. பாவமும் அறமும் வீடும் இன்பமும் துன்பந்தானும்
குணங்களுமாய எந்தை

*பாவமும் அறமும் வீடும்*
*இன்பமும் துன்பந்தானும்*
*கோவமும் அருளுமல்லாக்*
*குணங்களுமாய எந்தை*
*மூவரிலெங்கள் மூர்த்தி*
*இவனென முனிவரோடு*
*தேவர் வந்திறைஞ்சு*
*நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே*

*— திருமங்கையாழ்வார்.*

11. நஞ்சுண்டுனமில்லா ஒருவனுக்காட்பட்ட
உத்தமர்க்கு வானம் துளங்கிலென்........

வானம் துளங்கிலென் மண்
கம்பமாகிலென் மால் வரையும்
தானம் துளங்கித் தலை
தடுமாறிலென் தண் கடலும்
மீனம் பாடிலென் விரிசுடர்
வீழிலென் வேலை நஞ்சுண்
டுன மொன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே

— திருநாவுக்கரசர்.

12. என் நெஞ்சுளானே

அல்லாய்ப் பகலானுய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே என்றும்
கல்லாலமர்ந்தாயும் நீயே என்றும்
காளத்திக் கற்பகமும் நீயே என்றும்
சொல்லாய்ப் பொருளானுய் நீயே என்றும்
சோற்றுத் துறையுறைவாய் நீயே என்றும்
செல்வாய்த் திருவானுய் நீயே யென்று
நின்ற நெய்த்தானுவென் நெஞ்சுளாயே

— திருநாவுக்கரசர்.

13. குற்றம் நீ குணங்கள் நீ

குற்றம் நீ குணங்கள் நீ
கூடலால வாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ
தொடர்ந்திலங்கு ஜோதி நீ
கற்றநூற் கருத்தும் நீ
அருத்தமின்ப மென்றிவை
முற்றும் நீ புகழ்ந்து
முன் உரைப்பதென் முகம்மனே

— திருஞானசம்பந்தர்.

14. பிறைதங்குசடையானை வலத்தேவைத்து

பிறைதங்கு சடையானை வலத்தேவைத்துப்
பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து
கறை தங்கு வேல் தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன் தாளணைகிற்பீர் கழநீர்கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்றுகைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணி
சிறைவண்டு களிபாடும் வயல் சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே

— திருமங்கையாழ்வார்.

15. தன்னடியார்க்கினியன் எந்தை எம்பெருமாள்

முனிவன் மூர்த்தி மூவராகி
வேதம் விரித்துரைத்த
புனிதன் பூவை வண்ணனண்ணல்
புண்ணியன் விண்ணவர் கோன்
தனியன் சேயன்
தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியனெந்தை எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே

— திருமங்கையாழ்வார்.

16. அண்ணிக்குமமுதூறும் என் நாவுக்கே

கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென் குருகூர்நம்பி என்றக்கால்
அண்ணிக்குமமுதூறு மென் நாவுக்கே

— மதுரகவியாழ்வார்.

**14.** அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே

எரியலா லுருவமில்லை
யேறலா லேறலில்லை
கரியலாற் போர்வையில்லை
காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப்
பெருந்தகைப் பிரானென்றேத்தும்
அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாறனார்க்கே

— திருநாவுக்கரசர்.

**15.** அன்பனே அரனே என்றரற்றுவார்க்கு
இன்பனாகும் ஈசன்

இன்பமும் பிறப்பும் இறப்பின்னொடு
துன்பமும் முடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்றரற்றுவார்க்கு
இன்பனாகும் எறும்பியூரீசனே

— திருநாவுக்கரசர்.

**16.** நின் கழலேயல தேத்தா நாவெனக்
கெந்தை பிரானீரே

பூத்தார் கொன்றையினைப் புலியின்னதள்
ஆர்த்தாயாடர வோடனலாடிய
கூத்தா நின் குரையார் கழலேயல
தேத்தா நாவெனக் கெந்தை பிரானீரே

17. பூந்துழாயானடிக்கே போதோடு நீரேந்தி
தொழா நிற்பார் மனமாசு தீரும் அருவினையும் சாரா

மனமாசு தீரும் அருவினையும் சாரா
தனதாய தானே கைகூடும் — புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி
தாம் தொழா நிற்பார் தமர்

— பொய்கையாழ்வார்.

18. அருவினையோடல்லல் பாவம் மீண்டொழிய
வேண்டில் முன்னொருநாள் தன்விலங்கை
வைத்தான் சரண்

அடைந்த வருவினையோ
டல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய
வேண்டில் — நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான்
முரணழிய முன்னொரு நாள்
தன் விலங்கை
வைத்தான் சரண்

— பொய்கையாழ்வார்.

19. செங்கட் கரியானைக் கைதொழுதக்கால்
வினையாலடர்ப்படார்

வினையாலடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கட் செல்லார் — நினைதற்
கரியானைச் சேயானை, ஆயிரம்பேர் செங்கட்
கரியானைக் கைதொழதக் கால்

— பொய்கையாழ்வார்.

17. மருகலானடி வாழ்த்தி வணங்கவே
பெருசலாம் தவம் பேதைமை தீரலாம்

பெருகாலம் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ரானந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே

— திருநாவுக்கரசர்.

18. மன்னுமாரோகணத்தானை நினையுமா
வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே

மனைவி தாய் தந்தை
மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி
வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகாரோகணத்தரனை
நினையுமா வல்லீராகில்
உய்யலாம் நெஞ்சினீரே

— திருநாவுக்கரசர்.

TAMIL NADU ARCHIVES MADRAS
113328

19. அல்லல் உள்ளன தீர்த்திடுவானை
நாம் பணியா விடலாமே

அல்லல் உள்ளன தீர்த்திடுவானை
அடைந்தவர்க்கமுதாயிடுவானை
ஒல்லை வல்லரவம் அசைத்தானைக்
கோல மார் கரியின் னுரியானை
நல்லவர்க்கணியானவன் தன்னை
நானும் காதல் செய்கின்ற பிரானை
எல்லிமல்லிகையே கமழ் நீடு
ரேத்தி நாம் பணியா விடலாமே

—சுந்தரமூர்த்தி.

20. மாயான்உனரக்கிடக்குமுள்ளத் தேனக்கு
கூற்றமும் சாரா கோடுவினையும்சாரா

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா — தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன் — ஆற்றங்
கரை கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக் கிடக்கு முள்ளத் தெனக்கு

— திருமழிசையாழ்வார்.

21. பிணியோழித்தமரர் பேரு விசும்பருளும்
பேருளாளனேம் பேருமான்

துணிவினியுனக்குச் சொல்லுவன்
மனமே தொழுதொழ தொண்டர்கள் தமக்கு
பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும்
பேரருளாளனெம் பெருமான்
அணிமலர்க்குழலாராம்பையர்
துகிலுமாரமும் வாரிவந்து — அணிநீர்
மணிகொழித்திழிந்த கங்கையின்
கரைமேல் வதரியாச்சி ராமத்துள்ளானே

— திருமழிசையாழ்வார்.

22. மாலை வாழ்த்தினல் பறிந்தேழுந்து
தீவினைகள் பற்றறுதல் பான்மையே

அறிந்தறிந்து வாமன
னடியிணை வணங்கினல்
செறிந்தெழுந்த ஞானமோடு
செல்வமும் சிறந்திடும்
மறிந்தெழுந்த தெண்டிரையுள்
மன்னு மாலை வாழ்த்தினல்
பறித்தெழுந்து தீவினைகள்
பற்றுதல் பான்மையே

— திருமழிசையாழ்வார்.

20. சிற்றம்பலவனூர்க்கு அடிமை பூண்டேனுக்கே
அல்லல் என் செயும் அருவினை என் செயும்

அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனூர்க்கு
எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே

21. செந்நெறியான் கழல் மனத்தினுள் வைக்கவே
பிறப்பு இறப்பு நீங்கி இன்பம் வந்தெய்திடும்

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியின்பம் வந்தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறியான் கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே

— திருநாவுக்கரசு.

22. அண்ணமலை கைதொழ ஓடிப்போம்
நமதுள்ள வினை களே

தேடிச்சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையுமாட்கொள்வர்
ஆடிப் பாடியண்ணமலை கைதொழ
ஓடிப் போம் நமதுள்ள வினைகளே

— திருநாவுக்கரசு.

**23.** உய்வதோர் உபாயம் நல்க வேண்டும்

வெய்ய வாழி சங்கு தண்டு
  வில்லும் வாளு மேந்து சீர்க்
கைய! செய்ய போதில்
  மாது சேரு மார்பநாதனே!
ஐயிலாய வாக்கை நோயறுத்து
  வந்து நின்னடைந்து
உய்வதோருபாயம் நீ
  எனக்கு நல்க வேண்டுமே

— திருமழிசையாழ்வார்.

**24.** மீள்விலாத போகம் நல்கவேண்டும்

வாள்களாகி நாள்கள்செல்ல
  நோய்மை குன்றிமூப்பெய்தி
மாளு நாளதாதலால்
  வணங்கிவாழ்த்தென் நெஞ்சமே
ஆளதாகு நன்மையென்று
  நன்குணர்ந்த தன்றியும்
மீள்விலாத போகம் நல்க
  வேண்டும் மாலபாதமே

— திருமழிசையாழ்வார்.

**25.** நின் பாதபங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ
நினைக்க வேண்டுமே

இரந்துரைப்பதுண்டு வாழி
  ஏமநீர் நிறத்தமா
வரந்தரும் திருக்குறிப்பில்
  வைத்ததாகில் மன்னுசீர்
பரந்த சிந்தை யொன்றி
  நின்று நின்ன பாதபங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக
  நீ நினைக்க வேண்டுமே

— திருமழிசையாழ்வார்.

**23.** அண்ணலே அஞ்சலென்னாய்

வரைகிலோன் புலன்களைந்தும்
வரைகிலாப் பிறவிமாயப்
புரையிலே யடங்கிநின்று
புறப்படும் வழியும் காணேன்
அரையிலே மிளிருநாகத்தண்ணலே
அஞ்சலென்னாய்
திரையுலாம் பழனவேலித்
திருக்கொண்டீச் சுரத்துளானே

— திருநாவுக்கரசர்.

**24.** இரைப்பனேனுக்கோர் உய்வகையருளாய்

நரைப்பு மூப்பொடு பிணிவருமின்னே
நன்றியில் வினையே துணிந்தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை யறிந்தேன்
அஞ்சினேன் நமனாரவர் தம்மை
உரைப்பன் நானுன் சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறியாத
இரைப்பனேனுக்கொரு உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே

— சுந்தரமூர்த்தி.

**25.** உந்தன்வார்கழற்கு அன்பெனக்கு

நிரந்தரமாய் அருளாய்
பரந்து பல்லாய் மலரிட்டு
முட்டாதடியே இறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே
பெறலாம் என்றும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே
உந்தன் வார்கழற்கு அன்பெனக்கு
நிரந்தரமாய் அருளாய்
நின்னை எத்தமுழுவதுமே

— மாணிக்கவாசகர்.

26. பிறவாமை எனைப்பணிஎந்தை பிரானே

கறவாமட நாகுதன் கன்றுள்ளினாற் போல்
மறவாதடியே னுன்னையே அழைக்கின்றேன்
நறவார் பொழில் சூழ் நறையூர் நின்ற நம்பி
பிறவாமை எனைப்பணி எந்தைபிரானே

— திருமங்கையாழ்வார்.

27. அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்

துப்புடையாரை அடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பென்னை வந்து நலியும்
போதங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி
வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே

— பெரியாழ்வார்.

28. நமன்தமர் பற்றி மோதும்போது என்னைக்
காக்க வேண்டும்

நானேது முன் மாயமொன்றறியேன்
நமன்தமர்பற்றி நலிந்திட்டு — இந்த
ஊனே புகேயென்று மோதும்போதங்கேதும்
நானுன்னை நினைக்கமாட்டேன்
வானேய் வானவர் தங்களீசா !
மதுரை பிறந்த மாமாயனே — என்
ஆனாய் நீ யென்னைக் காக்க வேண்டும்
அரங்கத்தரவணைப் பள்ளியானே

— பெரியாழ்வார்.

26. உனைவேண்டிக் கொள்வேன்பிறவாமையே

எங்கேனும் போகினும் எம்பெருமானே நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறை கொண்டாறலைப்பாரிலை
பொங்கா டரவா புக்கொளியூ ரவிநாசியே
எங்கோனே உனை வேண்டிக்கொள்வேன் பிறவாமையே

— சுந்தரமூர்த்தி.

27. அம்மை அடியேறகருளுதி என்பதிங்கு ஆரறிவார்?

வெம்மை நமன்தமர் மிக்கு
விரவிவிழப்பதென்முன்
இம்மை உன் தாள் என்தன்
நெஞ்சத்தெழுதிவை ஈங்கிகழில்
அம்மை யடியேற் கருளுதி
என்பதிங் காரறிவார்
செம்மை தரு சத்திமுற்றத்
துறையும் சிவக் கொழுந்தே

— திருநாவுக்கரசர்.

28. தென்றிசைக்கே உந்திடும் போது
மறக்கினுமென்னைக் குறிக்கோண்மினே

அந்தமு மாதியமாகி
நின்றீரண்டமொண்டிசையும்
பந்தமும் வீடும்
பரப்புகின்றீர் பசுவேற்றுகந்தீர்
வெந்தழ லோம்புமிழலையுள்ளீர்
என்னைத் தென்றிசைக்கே
உந்திடும்போது மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே

— திருநாவுக்கரசர்.

29. காலனுர் தமரால் படுவதோர் கொடுமிறைக்கஞ்சி நடுங்கி உன்திருவடி அடைந்தேன்.

இடும்பையாலடர்ப் புண்டிடு மினேதுற்றென்
றிரந்தவர்க்கில்லேயே யென்று
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேனந்தோ !
நினேக்கிலேன் வினேப்பயன் தன்னே
கடுஞ்சோலார்கடியார் காலனுர் தமரால்
படுவதோர் கொடுமிறைக்கஞ்சி
நடுங்கி நான் வந்துன் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்

— திருமங்கையாழ்வார்.

30. பிறர்க்கே யுழைத்து ஏழையானேன்

தெரியேன் பாலகனுய்ப் பல
தீமைகள் செய்து விட்டேன்
பெரியேனுயின பின் பிறர்க்கே
யுழைத்தேழையானேன்
கரிசேர் பூம்பொழில் சூழ் கன
மாமலே வேங்கடவா
அரியே வந்தடைந்தேன் அடியேனே
யாட்கொண்டருளே

— திருமங்கையாழ்வார்.

31. கோரமாதவம் செய்தனன்கொல்?

பாரமாய பழவினே பற்றறுத்து
என்னேத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி
என்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கொல்!
அறியேன் - அரங்கத்தம்மான் திரு
வாரமார்பதன்றே அடியேனே
ஆட்கொண்டதே

— திருப்பாணுழ்வார்.

**29.** நமன்தமர்நலியில் இவன் மற்றென்னடி யானென விலக்கும் சிந்தையால் உன் திருவடி அடைந்தேன்

அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண்டடியேன்
எந்தை நீ யெனை நமன்தமர் நலியில்
இவன் மற்றென்னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே

— சுந்தரமூர்த்தி.

**30** குறிக்கோளிலாது கெட்டேன்

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்தநாளும்
குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித்
திருக்கொண்டீச்சுரத் துளானே

— திருநாவுக்கரசர்.

**31.** நானேயோ தவம் செய்தேன்?

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம்
புகுந்தடியேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

— மாணிக்கவாசகர்.

32. மனத்தே புகுந்தாயைப் போகலோட்டேன்

கந்தமாமலரெட்டுமிட்டு நின்
காமர்சேவடி கைதொழு தெழும்
புந்தியேன் மனத்தே புகுந்தாயைப்
போகலொட்டேன்
சந்திவேள்வி சடங்கு நான் மறையோதி
யோது வித்தாதியாய் வரும்
அந்தணாளரளு வணியாலிஅம்மானே

— திருமங்கையாழ்வார்.

33. வேண்டேன் மனை வாழ்க்கை

சாதலும் பிறத்தலும் என்றிவற்றைக்
காதல் செய்யாதுன் கழலடைந்தேன்
ஓதல் செய் நான் மறையாகியும்ப
ராதல்செய்மூவுருவானவனே
ஆண்டாயுன்னைக் காண்பதோ
ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனை வாழ்க்கையை
விண்ணகர் மேயவனே

— திருமங்கையாழ்வார்.

34. இச்சுவை தவிர இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்

பச்சை மாமலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே!
ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

32. மனம் புகுந்தாய் - கழலடி பூண்டு கோண்
டொழிந்தேன் - புறம் போயினுல் அறையோ!

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம் புகுந்தாய் கழலடி
பூண்டு கொண்டொழிந்தேன்
புறம் போயினு லறையோ
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகை மேலெழுகொடி
வானிளம்மதி
தீண்டி வந்துலவும்
திருவாரூர் அம்மானே

— திருநாவுக்கரசர்.

33. இழித்தேன் பிறப்பினை நான்

பிறத்தலும் பிறந்தாற் பணிப்பட வாய்ந்தசைந்துட
லம்புகுந்து நின்
றிறக்குமாறு உளதே
இழித்தேன் பிறப்பினை நான்
அறத்தையே புரிந்த மனத்தனுய் ஆர்வச்செற்ற
குரோத நீக்கியுன்
திறத்தனுய் ஒழிந்தேன்
திருவாரூர் அம்மானே

— திருநாவுக்கரசர்.

34. வானேயும் பெறில் வேண்டேன் — உன்
அருள் பெறு நான் என்றேன்றே வருந்துவானே

யான் ஏதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக்கென் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனே எம்பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே

— மாணிக்கவாசகர்.

**35.** மறந்தேன் உன்னை — அதனால் இடும்பைக் குழியில் பிறந்தே யெய்த் தொழிந்தேன்

மறந்தேனுன்னை முன்னம்
  மறந்த மதியின் மனத்தால்
இறந்தேன் எத்தனையுமதனால்
  இடும்பைக் குழியில்
பிறந்தே யெய்த்தொழிந்தேன்
  பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்னடிக்கே
திரு விண்ணகர் மேயவனே

— திருமங்கையாழ்வார்.

**36.** உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே

புள்வாய் பிளந்த புனிதா என்றழைக்க
உள்ளே நின்றென்னுள்ளம் குளிருமொருவா !
கள்வா ! கடன்மல்லைக் கிடந்த கரும்பே !
வள்ளாலுன்னை எங்ஙனம் நான் மறக்கேனே

— திருமங்கையாழ்வார்.

**37.** இலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன்

குலங்களாய வீரிரண்டிலொன்றிலும்
  பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாலிலும்
  நவின்றிலேன்
புலன்களைந்தும் வென்றிலேன்
  பொறியிலேன் புனிதநின்
இலங்குபாதமன்றி மற்றோர்
  பற்றிலேனெம்மீசனே

— திருமழிசையாழ்வார்,

35. நினைப்பின்றி மனத்துன்னை — பேயாய்த்
திரிந் தெய்த்தேன்

நாயேன் பால நாளும்
நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன்
பெறலாகா அருள்பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள்
ஆயாவுனக் காளாயினி
அல்லேன் எனலாமே

— சுந்தரமூர்த்தி.

36. மறந்தென்னினைக்கேனே

வெந்தநீறுமெய் பூச வல்லானை
வேத மால் விடையேற வல்லானை
அந்தமாதியறிதற் கரியானை
ஆறலைத்த சடையானை யம்மானைச்
சிந்தை யென் தடுமாற்றறுப்பானைத்
தேவ தேவனென் சொல் முனியாதே
வந்தெனதுள்ளம் புகும் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனே

— சுந்தரமூர்த்தி.

37. நின் திருவடிக்காம் பவமே அருளு கண்டாய்

தவமே புரிந்திலன் தண்மலரிட்டு
முட்டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
உனக்கன்பருள்ளாம்
சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்
நின் திருவடிக்காம்
பவமே அருளுகண்டாய்
அடியேற்கு எம்பரம்பரனே

— மாணிக்கவாசகர்.

38. ஆயனடியல்லது மற்றறியேனே

சேயனணியன் என் சிந்தையுள் நின்ற
மாயன் மணிவாளொளி வெண்தரளங்கள்
வேய் விண்டுதிர் வேங்கடமா மலை மேய
ஆயனடி யல்லது மற்றறியேனே

— திருமங்கையாழ்வார்.

39. வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன்

வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன்
உந்தனிந் திரஞாலங்களால்
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய்
நீ யொருவர்க்கும் மெய்யனில்லை
அளித்தெங்கு நாடு நகரமும்
தம்முடைத் தீவினைத் தீர்க்கலுற்று
தெளித்துவலஞ்செய்யும் தீர்த்த முடைத்
திருமாலிருஞ்சோலை எய்தாய்

— பெரியாழ்வார்.

38. அடியேன் உளனையல்லால் அறியேன்
மற்மற்றோருவரையே

கடியேன் காதன்மையாற் கழற்
போதறியாத என்னுள்
குடியாக் கோயில் கொண்ட
குளிர்வார் சடை யெங்குழகா
முடியால் வானவர்கள்
முயங்குந்திருக் காளத்தியாய்
அடியேனுன்னை யல்லால்
அடியேன் மற்றொருவரையே

— சுந்தரமூர்த்தி.

39. என்னெஞ்சிடம் வளைத்துக் கோண்டிருந்தேன்
வலிசெய்து போகலோட்டேன்

முளைத்த வெண்பிறை மொய்சடையுடையா
யெப்போதுமென்
நெஞ்சிடம் கொள்ள
வளைத்துக் கொண்டிருந்தேன்
வலி செய்து போகலொட்டேன்
அளைப்பிரிந்த வலவன் போய்ப்புகு தந்த காலமும்
கண்டு தன்பெடை
திளைகதும் தண் கழனித்
திருவாரூர் அம்மானே

—திருநாவுக்கரசர்.

**40.** நன்றேசெய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய், பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

— மாணிக்கவாசகர்.

**41.** உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதி
என்று வெள்கிப் போய் என்னுள்ளே விலவறச்
சிரித்திட்டேனே

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளு வானுணர் வொன்றில்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்
உள்ளுவாருள்ளிற்றெல்லாம்
உடனிருந்தறிதியென்று
வெள்கிப் போயென்னுள்ளே நான்
விலவறச் சிரித்திட்டேனே

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

**42.** என்செய்வான் தோன்றினேனே

போதெல்லாம் போதுகொண்டென்
பொன்னடி புனையமாட்டேன்
தீதிலாமொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்பமாட்டேன்
காதலால் நெஞ்சமன்பு
கலந்திலேனது தன்னாலே
ஏதிலேன் அரங்கர்க்கல்லேன்
என் செய்வான் தோன்றினேனே

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

40. நல்லாரறிவீர், தீயாரறிவீர், நமக்கிவ்
வுலகத்துக்கு எல்லாமறிவீர்

சொல்லாதொழியகில்லேன், அறிந்த சொல்லில்
நும்மடியார்
எல்லாரோடுமொக்க எண்ணியிருந்தீரடியேனை
நல்லாரறிவீர், தீயாரறிவீர், நமக்கிவ்வுலகத்து
எல்லாமறிவீர் இதேயறிவீர், இந்தளூரீரே

— திருமங்கையாழ்வார்.

41. உள்குவாருள்கிற்வெல்லா முடனிருந்தறிதிஎன்று
வேள்கி நானும் விலாவறச் சிரித்திட்டேனே

கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கி
தெள்ளியேனாகிநின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற்றெல்லா
முடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கி
நானும் விலாவறச் சிரித்திட்டேனே

— திருநாவுக்கரசு.

42. என்செய்வான் தோன்றினேனே

வென்றிலேன் புலன் களைந்தும்
வென்றவர் வளாகந்தன்னுள்
சென்றிலே னாதலாலே
செந்நெறியதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்புகின்றே
னீசனே னீசனேயோ
இன்றுளேன் நாளையில்லேன்
என்செய்வான் தோன்றினேனே

— திருநாவுக்கரசு.

43. துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெருதுழல்கின்றேன்

என்புருகி யினவேல் நெடுங்கண்கள்
இமைப் பொருந்தா பல நாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தனென்பதோர்
தோணி பெருதுழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு
நோயது நீயுமறிதிகுயிலே
பொன்புரை மேனிக்கருளக்
கொடியுடைப் புண்ணியனை வரக் கூவாய்

— ஆண்டாள்.

44. வாசிவல்லீர்! இந்தளூர்! வாழ்ந்தே போம் நீரே

ஆசை வழுவாதேத்தும் எமக்கிங்கிழுக்
காய்த்து — அடியோர்க்குத்
தேசமறியவுமக்கே ஆளாய்த்
திரிகின்றோமுக்கு
காசினொளியில் திகழும் வண்ணம்
காட்டீர் — எம்பெருமான்
வாசிவல்லீர் இந்தளூரீர்!
வாழ்ந்தே போம் நீரே

— திருமங்கையாழ்வார்.

45. 'எம்மைப் பணியறியா விட்டீர்'

மாட்டீரானீர் பணிநீர் கொள்ள எம்மைப் பணியறியா
வீட்டீர் இதனை வேறேசொன்னோம் இந்தளூரீரே
காட்டிரானீர் நுந்தமடிக்கள், காட்டில் உமக்கிந்த
நாட்டே வந்து தொண்டரான நாங்களுய்யோமே

— திருமங்கையாழ்வார்.

**43.** இங்கிளைக்கின்றேற்கு அக்கரைக்கே
ஏற வாங்கும் தோணியை

பேணிய நற்பிறை தவழ் செஞ்சடையி னானைப்
பித்தரா மடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூயசோதிச்
சுலா வெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் துறையுண் மேய
அரனடியே அடி நாயேன் அடைந்துய்ந்தேனே

— திருநாவுக்கரசு.

**44.** வாளா அங்கிருப்பீா! திருவாரீர்
வாழ்ந்து போதீரே

மீளா அடிமை உமக்கே
ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போலுள்ளே
கனன்று முகத்தான்மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளா அங்கிருப்பீர்
திருவாரூரீர் வாழ்ந்துபோதீரே

— சுந்தரமூர்த்தி.

**45.** எம்மையாள்வான் இருப்பதேன்னீர்?

வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினலும் வாய் திறந்தொன்
றில்லையென்னீர் உண்டுமென்னீர்
எம்மை ஆள்வான் இருப்பதென்னீர்
பல்லையுக்கப் படுதலையிர் பகலெல்லாம்
போய்ப் பலி திரிந்திங்
கொல்லை வாழ்க்கை ஒழியமாட்டீர்
ஓண காந்தன் தளியுளீரே

— சுந்திரமூர்த்தி.

46. பாவமெல்லாம் கைவிட்டோடி தூறுகள் பாய்ந்தனவே

எம்மனா என் குலதெய்வமே
  என்னுடை நாயகனே
நின்னுள்ளேனாயப்பெற்ற நன்மை
  இவ்வுலகினிலார் பெறுவார்!
நம்மன் போலே வீழ்ந்தமுக்கும்
  நாட்டிலுள்ள பாவமெல்லாம்
சும்மெனாதே கைவிட்டோடித்
  தூறுகள் பாய்ந்தனவே

— பெரியாழ்வார்.

47. வாசவார் குழல் மங்கை இவள் மாலுறுகின்றாளே

பேசவும் தெரியாத பெண்மையில்
  பேதையேன் பேதையிவள்
கூசமின்றி நின்றார்கள் தம்மெதிர்
  கோல்கழிந்தான் மூழையாய்
கேசவா என்றும் கேடிலீ என்றும்
  கிஞ்சுக வாய்மொழியாள்
வாசவார் குழல்மங்கைமீரிவள்
  மாலுறுகின்றாளே

— பெரியாழ்வார்.

48. மையல் கொண்டொழிந்தேன் எந்தன் மாலுக்கே

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந்தன்னோடும் கூடுவதில்லை யான்
ஐயனே! அரங்கரவென்றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தேன் என்றன் மாலுக்கே

— குலசேகராழ்வார்.

**46.** முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த ஆண்டான்

என்புள்ளுருக்கி இரு வினையை ஈடழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

— மாணிக்கவாசகர்.

**47.** மூர்த்தி என்றாள் எங்கள் பேதையே

முற்றிலா முலையாளிவளாகிலும்
அற்றந் தீர்க்கு மறிவிலளாகிலும்
கற்றைச் செஞ்சடையான் கடம்பந்துறைப்
பெற்ற மூர்த்தி யென்றாள் எங்கள் பேதையே

— திருநாவுக்கரசு.

**48.** மகிழ்ந்தாடும் கூத்தனுக்கன்பு பட்டாளன்றே

பாடலாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூடலாக்கிடும் குன்றின் மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத்துண் மகிழ்ந்
தாடுங் கூத்தனுக் கன்பு பட்டாளன்றே

— திருநாவுக்கரசர்.

**49.** நீயும் குயிலே இன்று நாராயணனை வரக் கூவாயே

அன்றுலகமளந்தானை யுகந் தடிமைக்கணவன்
வலி செய்ய
தென்றலும் திங்களுமூடறுத்தென்னை
நலியும் முறைமை யறியேன்
என்றுமிக்காவிலிருந்திருந் தென்னைத்
ததர்த்தாதே நீயும் குயிலே
இன்று நாராயணனை வர கூவாயேல்
இங்குத்தை நின்றும் துரப்பன்

— ஆண்டாள்.

**50.** நீ நிலாய வண்ண! நின்னையார்
நினைக்க வல்லரே

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண நின்னை யார் நினைக்க வல்லரே

— திருமழிசையாழ்வார்.

**51.** ஆதியான கால நின்னை யாவர் காண வல்லரே

ஆதியான வானவர்க்கு மண்டமாயவபுறத்து
ஆதியான வானவர்க்கு மாதியான வாதி நீ
ஆதியான வானவாண ரந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான கால நின்னை யாவர் காண வல்லரே

— திருமழிசையாழ்வார்.

**49.** செந்தழல் போல் திருமேனி தேவர் பிரான் வரக் கூவாய்

கொந்தணவும் பொழிற்சோலைக்
  கூங்குயிலே இது கேள் நீ
அந்தணனாகி வந்திங்கே
  அழகிய சேவடிகாட்டி
எந்தமராம் இவனென்றிங் கென்னையும்
  ஆட்கொண்டருளும்
செந்தழல்போல் திருமேனித் தேவர்பிரான்
  வரக் கூவாய் !

— மாணிக்கவாசகர்.

**50.** நீயலாமல் நின்ற நேர்மை யாவர் காண வல்லரே

ஆவிலாய வைந்துமாய் புனலில் நின்ற நான்குமாய்
தீயிலாய மூன்றுமாய் சிறந்த காலிரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறு வேறுதன்மையாய்
நீயலாமல் நின்ற நேர்மை யாவர் காணவல்லரே

— சிவவாக்கியர்:

**51.** கொண்ட கோலமான நேர்மை கூர்மை என்ன கூர்மையே

அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூலமான நீ
கண்டம் நீ கருத்து நீ காவியங்களான நீ
புண்டரீகமன்றுளே புணருகின்ற புண்ணியர்
கொண்ட கோலமான நேர்மை கூர்மை என்ன
  கூர்மையே

— சிவவாக்கியர்.

52. மறைப்பெரும் பொருளை வானவர்கோனைக் கண்டு நான் வாழ்ந்தொழிந்தேனே

பிறப்பொடு மூப்பொன்றில்லவன்
 தன்னைப் பேதியாவின்பவெள்ளத்தை
இறப்பெதிர் காலக் கழிவுமானானை,
 ஏழிசையின் சுவை தன்னை
சிறப்புடை மறையோர் நாங்கை நன்னடுவுள்
 செம்பொன் செய்கோயிலினுள்ளே
மறைப்பெரும் பொருளை வானவர்கோனைக் கண்டு
 நான் வாழ்ந்தொழிந்தேனே

— திருமங்கையாழ்வார்.

53. என்னையாளுடையப்பனை திருவல்லிக் கேணி கண்டேனே

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
 விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனர்
 களிற்றை குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னையாளுடை
 அப்பனை, ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் மாடமாமயிலைத்
 திருவல்லிக் கேணிகண்டேனே

— திருமங்கையாழ்வார்.

54. தொண்டனேன் கண்டு கொண்டேனே

தொண்டாயார் தாம் பரவும் அடியினைப்
படி கடந்த தாளாளர்க்காளாயுய்தல்
விண்டானை தென்னிலங்கையரக்கர் வேந்தை
விலங்குண்ணவலங்கை வாய்ச்சரங்களாண்டு
பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து
வேள்விகளும் கேள்வியோடங்கமாறும்
கண்டானை தொண்டனேன் கண்டு கொண்டேன்
கடி பொழில் சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே

— திருமங்கையாழ்வார்.

ஒ:4146
N57



52. பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி
ஏழுலகும் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங்கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி யின்னமுதமாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே

— திருநாவுக்கரசர்.

53. புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பூந்துருத்திக் கண்டேன் நானே

மிக்கானை வெண்ணீறு சண்ணித்தானை
விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி
நக்கானை நான்மறைகள் பாடினானை
நல்லார்கள் பேணிப் பரவ நின்ற
தக்கானைத் தண்டாமரை மேலண்ண
தலை கொண்டு மாத்திரைக் கணுலகமெல்லாம்
புக்கானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே

— திருநாவுக்கரசர்.

NADU ARC. MADRAS
No. 113328

54. கஞ்சனூராண்ட கற்பகத்தை
கண்ணாரக் கண்டுய்ந்தேனே

தொண்டர் குழாம் தொழுதேத்த வருள் செய்வானைச்
சுடர் மழுவாட்படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழி செஞ்சடையினானைச்
செக்கர் வானொளியானைச் சேராதெண்ணில்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வியெல்லாம்
பாழ்படுத்துத் தலையறுத்துப் பற்கள் கொண்ட
கண்டகனைக் கஞ்சனூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே

— திருநாவுக்கரசர்.

7c

A/24 | 1

6A / 1-4b